புதுக்கவிதை

தலைப்பு - ஓர் மதத்தை பின்பற்றும் சுதந்திரமும் மத நல்லிணக்கமும்

நாகரிகக் கூடுகளின்
துருக்கம்பிக் கதவுகளுக்குள்
அடைந்து கொள்ளாத ஆதிகாலங்களில்
அண்டத்தின் ஆண்டவன்
வானும் மண்ணும் நீரும் நெருப்பும்
வீசும் காற்றும்..

பொத்தலில்லா ஒற்றைக்குடைக்குள்
போற்றிவளர்த்த மனிதம் குழைத்து
மதங்கள் நெய்யத் தொடங்கியதொரு காலத்தில்
அன்பில் பிணைந்தே கிடந்தார்கள்
அத்தனை கடவுள்களும்..

பின்..
என் மதம் உன் மதம்
என்றொரு பிரிவினை வந்திடும்
என்றறிந்திருந்தால்
அன்றே கடவுள்களால்
அறுத்தெறிந்திருக்கப்படும்
அந்த மதங்களைப் பின்னும்
அகோர மனங்களின் இழைகள்..

அன்பே சிவம்..
அன்பே புத்தம்..
அன்பே அல்லா..
அன்பே யேசு..
அன்பே அகிலம்..

அன்பின் இறக்கைகள் விரித்து
அவரவர் மதங்கள் சுமந்து
சுதந்திரமாய் பறப்போம்
நேச நாற்றுக்களை
நெஞ்சமெல்லாம் விதைத்த படியே..

நாளை விரியும்
மதங்களின் முகிழ்களில்
மனிதம் பூத்து மணம் வீசட்டும்.........

ஆக்கம்
உமாஜினி ராம்கார்திவன்
(இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் )
வயது- 25 (1995.09.15)
மின்னஞ்சல் முகவரி- umajiniramkarthivan@gmail.com
தே.அடையாள அட்டை இல- 957590985v
வயது- 25 (1995.09.15)